மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.302/2017</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 27ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>27.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் ரீ.ச.எண்.44 மற்றும் 45 ஆகிய பூமிகளில் தான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான் இரண்டு காலைகளும் சேர்ந்து மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 ஏக்கர் 85 சென்ட். நான் கிரயம் பெற்ற ரீ.ச.எண்.45 மற்றும் 44 பூமிகளை பொறுத்து எந்த பிரச்சனையும் இல்லை என்றால் தடத்தை பொறுத்து பிரச்சனை உள்ளது. ரீ.ச.எண்.44 மற்றும் 45 காலைகளுக்கான தடத்தை பொறுத்து பிரச்சனை உள்ளதா என்றால் ஆமாம்.

2. அதனால் தான் வழக்கு போட்டு உள்ளேன். க.ச.எண்.47 பூமியை பொறுத்து எனது பெயரில் பட்டாவோ உரிமை ஆவணங்களோ வேறு ஆவணங்களோ எனது பெயரில் இல்லை என்றால் ஆமாம். க.ச.எண்.47 பூமியின் விஸ்தீரணம் 10 ஏக்கருக்கும் அதிகமாக

இருக்குமா என்றால் அது எனக்கு தெரியவில்லை. க.ச.எண்.47 பூமியை பொறுத்து எனது பெயரில் பத்திரமோ பாதை பாத்தியமோ இல்லை என்றால் ஆமாம் எனது பூமிக்கு மேல்புறம் க.ச.எண்.64 ல் தார் சாலை உள்ளது என்றால் அங்கு தார் சாலையை இல்லை. எனது பூமியை ஒட்டி வடபுறமாக ரங்கசாமி என்பவரது பூமி உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி ரங்கசாமி என்பவரது பூமிக்கு கிழப்புறமாக வேலுச்சாமி பூமி உள்ளது. அந்த பூமிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை அதற்கு கிழப்புறமாக ஒரு ரோடு உள்ளதா என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தை பார்த்தால் அதைப்பற்றி என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது.

3. தார் ரோட்டிற்கு மேற்புறமாக கிழ மேலாக 6 அடி அகலத்தில் பாதை உள்ளதா என்றால் உள்ளது அந்தப் பாதைக்கு மேல் புறமாக 12 அடி அகலம் உள்ள கிழமேல் பாதை எனது பூமியான ரீ.ச.எண். 45/2 பூமியோடு முடிவடைகிறது என்றால் சரிதான் ரீ.ச.எண்.45/2 பூமிக்கு கிளப்புறமாகத்தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் பூமிகள் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழப்புறமாக எனக்கு பாத்தியப்பட்ட ரீசர்வே எண் 45/6 பூமி உள்ளது என்றால் ஆமாம்.

4. மேற்படி ரீ.ச.எண்.45/3 முதல் ரீ.ச.எண்.45/6 வரையிலான பூமிகளுக்கு வடபுற பகுதியில் பாதை உள்ளது என்றால் ஆமாம். 6 அடி அகலத்தில் பாதை உள்ளது. அந்தப் பாதை ரீ.ச.எண்.47/1ல் இல்லை என்றால் ஆமாம். வழக்குரை வரைபடத்தில் கண்டுள்ள க.ச.எண்.45/3 முதல் க.ச.எண்.45/6 வரையிலான பூமிகளின் தென்புறமாகவும், க.ச.எண்.47 பூமிக்கு வடபுறமாகவும் தான் ஏரி உத்தி அமைந்துள்ளது என்றால்ஆமாம். ரீ.ச.எண்.47 /1 காலையானது ரீ.ச.எண்.45/2

காலைக்கு தென்புறமாக அமைந்துள்ளதா என்றால்ஆமாம் ரீ.ச.எண்.47/1 காலையை பொருத்து எனது பெயரிலோ எனது மூதாதையர்கள் பெயரிலோ எவ்வித பட்டாவும் உரிமை ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

5. ரீ.ச.எண்.47/1 காலையில் தென்னை மரங்கள் உள்ளதா என்றால் 5 மரங்கள் உள்ளது வழக்குரை மாதிரி வரைபடத்தில் சொல்லி உள்ள EFGB பூமிகளுக்கு தென்னை மரங்கள் இல்லாமல் இருந்திருந்தால் 12 அடி அகல தடத்திற்கு செல்லலாம் என்றால் அந்த வழியாக செல்ல முடியாது. ரீ.ச.எண்.47/1 காலையில் உள்ள தென்னை மரங்களை நான் அந்த பூமியை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்று சொன்னால் இல்லை நான் கிரயம் பெறும் போது அந்த பூமியையும் சேர்த்து வாங்கியுள்ளேன் எப்போது கிரயம் பெற்றேன் என்றால் வாங்கி 10, 20 வருடங்கள் இருக்கும் அதற்கான பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஆமாம்.

6. எனக்கு ரீ.ச.எண்.47/1 காலையில் 7.50 சென்ட் நிலத்தை யார் கிரயம் கொடுத்தார்கள் என்றால் பொன்னுசாமியும் சிவகாமியும் கிரயம் கொடுத்தார்கள் எந்த வருடம் எனக்கு கிரயம் கொடுத்தார்கள் என்றால் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் ரீ.ச.எண்.47/1 காலையில் ஏழரை சென்ட் பூமியை பொன்னுசாமியும் சிவகாமியும் கிரையம் கொடுத்தது சம்பந்தமாக நான் எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. ரீ.ச.எண்.47/1 காலையில் உள்ள ஏழரை சென்ட் பூமியானது இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி என்றும் நான் அதை

ஆக்கிரமிப்பு செய்து அதில் தென்னை மரங்கள் வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மழை அந்த ஏழரை சென்ட் பூமியும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டை பகுதி என்று சொன்னால் சரிதான் அது கொஞ்சம் குழியான பகுதி. 12 அடி அகல பாதையை பொருத்தும் ஆறடி அகல பாதையை பொருத்தும் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரியல்ல. அந்த பாதைகளில் நான் சென்று வந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

8. எந்தவிதமான எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களும் இல்லாமல் அக்கிரமமாக ரீ.ச.எண்.47/1 காலையில் நான் பாதை பாத்தியம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான். அது குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியும். ஆணையர் அறிக்கை நில அளவையர் கொடுத்த வரைபடம் மற்றும் அளவு வரைபடங்கள் உண்மையானவை என்றால் ஆமாம்.

9. நீதிமன்ற ஆணையர் தான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் ரீ.ச.எண்.47/1 காலையில் நான் இந்த வழக்கில் கோரியுள்ள படி எந்த விதமான பாதையோ, உத்தியோ இல்லை என காட்டியுள்ளார் என்றால் ஆமாம்நான் உண்மை சங்கரிகளை மறைத்து எனது கிரைய ஆவணங்களுக்கு விரோதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கோரும் பாதை பாத்தியம் ரீ.ச.எண்.45 காலையின்

வடபுறத்தில் தான் அமைந்துள்ளது என்றும் அதை மறைத்து பிரதிவாதிகள் பூமியில் தடம் உள்ளதாக நான் இந்த வழக்கை பொய்யான சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது வழக்கு ஆதாரமற்ற வழக்கு என்றும் எனது உரிமை ஆவணங்களுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.27 19:08:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்